# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU



ஜுமுஆ பேருரை

தலைப்பு :

அல் - ஹுஜுராத்:

புறங்கூறுதல் (பகுதி 2)

**20 SEPTEMBER 2019**

**(20 MUHARRAM 1441 AH )**


ஹஸ்ரத் முஹையுதீன் அல் கலீஃ.பத்துல்லாஹ்

முனீர் அஹ்மது அஸீம் (அலை)

வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

**Phone No :- 917502272774**




# AL--Hujurat : Ghibbat (Part 2)

## அல் - ஹுஜுராத்: புறங்கூறுதல் (பகுதி 2)

---

உலகெங்கிலும் உள்ள தனது சஹாபாக்கள் புதிய சஹாபாக்கள் மற்றும் அனைத்து முஸ்லீம்களுக்கும் தனது ஸலாத்தினைத் தெரிவித்தபிறகு, **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தஷஹுஉத், தவ்வூத் மற்றும் சூறா.்.பாத்திஹா ஓதி "கடந்த வார ஜுஉமுஆ பேருரையின் தொடர்ச்சியை கிப்பத் பாகம் 2" என்ற தலைப்பில் ஜுஉமுஆ பேருரையியை வழங்கினார்கள்.

அல்லாஹ்வின் அருளால், கிப்பத் என்னும் தலைப்பை அடிப்படையாகக் கொண்டு கடந்த வாரம் நான் ஆரம்பித்த ஜுஉமுஆ போருரையின் தொடர்ச்சியை இந்த வாரமும் தொடர அவன் எனக்கு தவ்.்.பீக் வழங்கியிருக்கின்றான். இந்த விஷயமானது ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் உறுப்பினர்களுக்கும் பொதுவாக முஸ்லீம் சமுதாயத்திற்கும் மிக முக்கியமான ஒன்றாகும்.

கிப்பத் தொடர்பாக வெவ்வேறு ஹதீஸ்களை நாம் பகுப்பாய்வு செய்யும் போது நாம் ஒரே முடிவை எடுக்கிறோம். ஒருவரின் குறைபாட்டை நீங்கள் அறிந்திருக்கும் போது அல்லது அவரைப் பற்றியும் அவரது பலவீனங்களைப் பற்றியும் அதிகம் தெரிந்து கொள்ள நேரும் போது கிப்பத் நிகழ்கிறது. அதன் பிறகு மற்றவர்களின் பார்வையில் அவரை இழிவுப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனும் எல்லா இடங்களிலும் அவரை அவமானப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்துடனும் பெரிய மற்றும் சிறிய கூட்டங்களில் வைத்து அவருக்கு எதிராக புறங்கூறுவதற்கு இந்த வாய்ப்பை அத்தகைய மக்கள் பயன்படுத்துகின்றனர். அத்தகைய மக்களின் விரும்பம்

என்பது அந்த நபரின் குறைபாடுகள் குறித்து மற்ற மக்களுக்கு தெரியப்படுத்தவும், அவா் மீது பிற மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தவும், அவரிடமிருந்து மற்ற மக்கள் வெகுதூரம் விலகி செல்லவும் அல்லது அவரைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கவும் ஆகும். புறங்கூறுபவரின் திட்டத்தின்படி விஷயங்கள் அமையும் போது அவா் அதில் மிகுந்த மகிழ்ச்சியைப் பெறுகிறாா். அத்தகைய தீய மனம் கொண்டவா்கள் தங்கள் சொந்த குறைபாடுகளைப் பாா்ப்பதில்லை. மேலும் இந்த தவறான செயல்களுக்கு தங்கள் படைப்பாளனின் முன்னால் ஒருநாள் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி அவா்கள் சிந்திப்பதில்லை.

ஒருவா் தனது உள்ளத்தில் மறைத்து வைத்திருக்கும் பொறாமையும் வெறுப்பும்தான் அவரை ஒரு குற்றவாளியைப்போல் வினை புரியவும், தீயவரைப்போல் நடந்துக்கொள்ளவும், முட்டாள்தனமாக செயல்படவும் செய்கிறது. மற்றொரு வகை மக்களும் இருக்கின்றனா். அவா்கள் ஒரு நபரின் முன்னிலையில் வைத்தே அவரது குறைபாடுகளைப் பற்றி பேசுகின்றனா். அதில் அவா்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றனா். அந்நபா் இல்லாத போதெல்லாம், அவா் மீது நிறைய தீய பேச்சுகளைக் பேசுகின்றனா். தனக்குச் செவிசாய்க்கத் தயாராக இருக்கும் நபா்களால் தன்னைச் சூழ்ந்திருப்பதைக் கண்டால் அவா் அவமதிக்கவிரும்பும் அந்த நபரைப் பற்றி பேசுவதற்கு அந்த சந்தா்ப்பத்தை பயன்படுத்தி, முட்டாள்தனமாக பேசுகிறாா். ஏனென்றால் அதை மறுக்கவோ அல்லது தனது நன்மதிப்பை பாதுகாக்கவோ அந்நபா் அவ்விடத்தில் இல்லை என்பதாகும்.

எனவே இது ஒரு பெரிய பாவமாகிறது. மேலும் அல்லாஹ் திருமறையில் கூறுகிறான், அதாவது இந்த உதாரணம் மூலம் அதை தெளிவாகுகிறான்” உங்களுள் எவராவது மரணமடைந்துவிட்ட தம் சகோதரரின் மாமிசத்தை உண்ண விரும்புவாரா? ஒருவா் இதைக் கேட்கும் போது அதை அவர் வெறுத்துவிடவே செய்கிறாா். ஒரு நம்பிக்கையாளரைப் பொறுத்தவரையில் அதை வெறுத்துக் ஒதுக்குகிறாா். ஆனால் மறுபுறம், உள்ளத்தில் வெறுப்பைத் தூண்டும் ஒரு மோசமான நபரை பொறுத்த மட்டில் அவா் இந்த காரியத்தில் எந்த வித வெறுப்பும் காட்டமாட்டாா். அதாவது தெய்வீக வெளிப்பாட்டின் ஆரம்பத்தில் பெயா் தாங்கிய ஜமா அத்தே அஹ்மதியாவின்

அமீர் மற்றும் அவரது முல்லாக்கள் செய்ததைப் போல! 2001 – ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து இது போன்ற செயல்களைச் செய்வதில் அவர்கள் எந்தவிதமான குறையும் காட்டவில்லை. நேர்மாறாக, அவர்கள் தன்னின உண்ணிகளைப் போல, எங்கள் மாமிசத்தை பசியுடன் சாப்பிட்டனர்.

இங்கே இந்த வசனத்தின் (அல்குஜராத்-13) மூலம் ஒரு உண்மையின்பால் நம் கவனத்தை அல்லாஹ் ஈர்க்கிறான் அதாவது உங்கள் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்கு எதிராக நீங்கள் தினமும் பேசும்பொழுது, அதாவது உங்கள் இரத்த உறவுகள் மட்டுமல்ல மாறாக, நம்பிக்கை கொண்ட விசுவாசிகளாகிய சகோதரனுக்கும் சகோதரிக்கும் எதிராக நீங்கள் பேசும் போது, அவர்களின் இறந்த உடல்களின் மாமிசத்தை நீங்கள் சாப்பிடுவது போலாகும். புறங்கூறுதல் போன்ற இத்தகைய செயல்களில் ஏற்படும் நபர்கள் சிந்திக்க வேண்டும். அதாவது உங்கள் புறங்கூறுதல் எந்த ஓர் கோணத்திலிருந்தாலும் சரி, அதை அல்லாஹ் பார்வையிடுகிறான். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும் அதற்கு அங்கீகாரம் வழங்கவில்லை, அல்லாஹ் அவருக்கு வெளிப்படுத்தியவற்றில் மட்டும் அவர் எப்போதும் நிலைத்திருந்தார். அல்லாஹ் அனைத்தையும் அறிவான். அவர்கள் அதை எந்த நோக்கத்துடன் செய்தார்கள் என்பதை அவன் நன்கு அறிவான்.

**எனவே கிப்பத் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து தீமைகளும் அதாவது உங்கள் சகோதரர் மற்றும் சகோதரியின் மாமிசத்தை சாப்பிடுவது ஒரு கடுமையான ஆண்மீக நோயாகும். இது ஒரு பாவமாகும், மேலும் இது ஒரு பெரிய பலவீனமாகிறது. இது புறங்கூறுபவரின் இயல்பாக மாறிய ஒன்றாகும். அது அவருக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அத்தகைய நபர்களை சீர்திருத்திகொள்வது மற்றவர்களை சீர்திருத்துவதைவிட மிகவும் கடினமாகும். ஒருவர் தனது தவறுகளை மனசாட்சியின்படி எடுத்துக்கொண்டு, அவர் செய்த காரியமானது மிகவும் கடுமையான பாவம் என்றும் புரிந்துக் கொண்டால், அத்தகைய நபர் இறை மன்னிப்பை பெறுவதற்கு வாய்ப்பை பெறுகிறார். அவர் மனந்திரும்பி அப்பாவத்தை மீண்டும் செய்யகூடாது என்று முடிவை எடுத்துக்கொள்கிறார். அவ்வாறு செய்யும் போது அல்லாஹ் நிச்சயமாக அவரை மன்னித்து தனது கருணையை அவர் மீது பொழிகிறான். அநேகமான மக்கள் எனக்கு**

**எழுதுகிறார்கள், நான் நேரடியாகவும் இது போன்ற நிறையபேர்களை சந்தித்திருக்கிறேன். ஆனால் தாங்கள் புறங்கூறியதாக யாரும் சொல்லியதில்லை. தங்கள் பிழைகள் குறித்து விழிப்புடன் இருக்கும் சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் தங்கள் பிழைகளை உணர்ந்து தானாகவே முன்வந்து தங்களை சீர்திருத்த முயற்சிக்கின்றார்கள். பின்னர் அவர்கள் மிக சிறந்த நம்பிக்கையாளராக மாறுகிறார்கள். மறுபுறம் இது போன்ற பாவங்கள் செய்யும் நபர்களும் உள்ளனர். அவர்களில் பல மக்களும் தங்கள் தவறுகளில் விடாப்பிடியாக நிலைத்திருக்கின்றார்கள் மேலும் அவர்களில் பலர் தங்களைத தாங்களே நிரபராதிகளாகப் பார்பதிலும் நிலைத்திருக்கின்றார்கள் அவர்களைப் பொறுத்தவரை அவர்கள் எப்போதும் சரியான நிலையில் உள்ளர் என்று எண்ணுகின்றனர். அவர்கள் தங்கள் ஆணவத்தின் மூலம் தங்களை மதிப்புமிக்வர்கள் என்றும் எல்லாம் அறிந்தவர்கள் என்றும் தாங்கள் எப்போதும் சரியானவர்கள் என்றும் சித்தரிக்க முயலகிறார்கள். அவர்களின் பலவீனம்/குறைபாடுகள் மற்றும் கடுமையான பாவங்களை ஒப்புக்கொள்வதற்கான மனத்தாழ்மையும் தைரியமும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் இவ்வாறு சொல்வதை நீங்கள் காணமாட்டீர்கள் அதாவது அல்லாஹ் என்னை மன்னிக்கும்படி எனக்காக பிரார்த்தனை செய்யுங்கள், ஏனென்றால் நான் அல்லாஹ்வின் பார்வையில் மிகவும் வெறுக்கத்தக்க செயல்களை செய்திருக்கிறேன் என்று அவர்கள் கூற மாட்டார்கள். அவர்கள் உண்மையிலேயே நேர்மையனயானவர்/நிரபராதி என்ற எண்ணம் மக்களுக்கு இருக்கும். ஆனால் அல்லாஹ்வின் பார்வையில் அந்த நபரின் செயல்கள் உண்மையிலேயே கொடூரமானவை மேலும் அல்லாஹ்வுடனான அவனுடைய விளைவுகள் கடுமையாக இருக்கும்.**

நான் கலீபத்துல்லாஹ் என்ற நிலையில் சில நேரங்களில் என் சீடர்கள் பின்பற்றுபர்களுக்கு சில அறிவுரைகளை வழங்குகிறேன் இதுபோன்ற பல செய்திகளை உங்கள் அனைவருடைய கவனத்திற்கு கொண்டுவருகிறேன். இதனால் நீங்கள் எப்போதும் சரியான பாதையில் செல்ல வேண்டும் என்பதற்காகவே வழங்குகிறேன். இது போன்ற செய்கைகளால் உண்மையிலேயே பாதிக்கப்பட்ட சில உறுப்பினர்கள் உள்ளனர், அவர்கள் முற்றிலும் வருத்தப்படுகிறார்கள். அவர்கள் அச செய்திகளை தங்களுக்கு என எண்ணி நேரடியாக எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் அல்லாஹ்

அவர்களுக்கு எச்சரிக்கை செய்யும் பாவங்கள்/தவறுகளுக்கு அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்றால் அவர்களுக்கு அஞ்சத் தேவையில்லை. அந்நிலையில் அவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும் ஆனால் அல்லாஹ் எச்சரித்த மற்றும் வெளிப்படுத்தியவற்றில் அவர்கள் உண்மையிலேயே குற்றவாளிகள் என்றால், அல்லாஹ் எல்லா உள்ளங்களையும் அறிந்தவனாகவும் எல்லா செயல்களையும் காண்பவனாகவும் இருக்கின்றான் மேலும், அத்தகைய தவறான செயல்களுக்கு அவர்கள் குற்றவாளிகள் என்று புரிந்தவாறு அவர்கள் மனந்திரும்பி தங்களை சீர்திருத்த வேண்டும்.

## An Advice: ஒரு அறிவுரை

இந்த உலகில் தோல்வியை ஏற்றுக்கொள்வது நல்லது நீங்கள் நேர்மையானவர் என்பதை நீங்கள் நன்கு அறிந்திருந்தாலும், உண்மையில் அதன் பலன்கள் மறுமையில் மிகவும் இனிமையாக நீங்கள் பெற்றுவிடுவீர்கள். மனிதர்களான நாம் உண்மையில் மிகவும் பலவீனமானவர்கள். நாம் ஒரு தவறான செயலைச் செய்தால், நம்மை நிரபராதிகள் என்று சித்தரிபதில் நாம் பிடிவாதமாக இருக்ககூடாது. மேலும் இக்காரியத்தில் நாம் ஆணவத்தை காட்டக்கூடாது மாறாக, நீங்கள் செய்த செயலின் விளைவாக மிக இழிவான முடிவுக்கு ஆளாகுவதிலிருந்து அல்லாஹ் உங்களைப பாதுகாக்கும்படியும் உங்களை மன்னிக்கும்படியும் நீங்கள் மிக அதிகமாக பிரார்த்தனைச் செய்யவேண்டும். (நீங்கள் இத்தகைய பாவகரமான செயல்களைச் செய்யும் போது).

சில நேரங்களில் மக்கள் வேறு சில மக்களை புறங்கூறுவதையும் அதில் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைவதையும் நீங்கள் காண்கிறீர்கள். அவர்கள் யாரைப்பற்றி புறங்கூறுகின்றார்களோ அந்த நபர் அவர்கள் முன் எதிர்பாராதவிதமாக வரலாம் அதாவது அவர்கள் அத்தகைய உரையாடலில் இருக்கும் அறை அல்லது இடத்திற்குள் நுழைந்துவிட்டால் அவர்கள் தங்கள் உரையாடல்களின் தலைப்பை விரைவாக மாற்றுகிறார்கள் மேலும் குழப்பத்தை உண்டுபண்ணக்கூடிய இத்தகைய செயல்களில் சிக்கிவிட்டதன் விளைவாக திடீரென்று அவர்களின் முகங்கள் நிறம் மாறுகின்றன. அந்நிலையில் அவர்கள் தற்போது கூறியதை மறைக்க

முயற்சிக்கிறார்கள் வேறொரு தலைப்பைக் கொண்டு தங்கள் பேச்சை அவர்கள் விரைவாக மேம்படுத்துகிறார்கள். அதாவது தங்கள் குற்ற உணர்வை உணரும் மற்றொரு தலைப்பைக் கொண்டு ஒருவரை பற்றி அவர்கள் இப்போது சொன்னதை மறைக்க முயற்சிறார்கள். அந்த நபர் அவ்விடத்திலிருந்த விலகி செல்லும் போது அல்லது அவர்கள் அவரிடமிருந்து தூரத்தில் சென்றுவிட்டால் அவர்கள் அதை ஒரு வேடிக்கையாக எண்ணி சிரிப்பார்கள் ஆனால் உண்மையில் அது ஒரு அதிருப்தி சிரிப்பு மட்டுமாகத்தான் இருக்கும். நாங்கள் அவரிடம் சிக்கிகொள்வதிலிருந்து தப்பிவிட்டோம் என்று அவர்கள் இதயத்தில் எண்ணுகிறார்கள். அவர்கள் யாரை புறங்கூறினார்களோ அவர் முன்னிலையில் அவர்கள் உண்மையில் சிக்கிவிட்டனர், அவர்கள் ஒரு தவறான செயலைச் செய்தார்கள் என்பதை அவர்கள் முழுமையாக அறிந்திருக்கிறார்கள்.

மற்றொரு உதாரணம் பாருங்கள். நீங்கள் ஒருவரைப் பற்றி நல்ல விஷயங்களை மட்டுமே பேசும் போது அந்த நபர் நீங்கள் பேசிக்கொண்டிருக்கும் அறை/இடத்தில் வந்துவிட்டால் அல்லது உங்களுக்குப் பின்னால் அவர் இருந்தால்கூட நீங்கள் அவரைப் பற்றி பேசுகிறீர்கள் என்று நீங்கள் வெட்கப்படவோ, அதிருப்தி அடையவோ மாட்டீர்கள். ஏனெனில் நீங்கள் அவரது நல்ல குணங்களைப் பற்றி பேசுகிறீர்கள் அதாவது, நீங்கள் ஒரு நல்ல நோக்கத்துடன் மட்டுமே அவரைப் பற்றி நன்றாகப் பேசிக் கொண்டிருந்தீர்கள், இதனால் நீங்கள் கூறுவதை அந்த நபர் உங்களுக்குப் பின்னால் நின்று கேட்டார் என்பதனால் நீங்கள் வெட்கப்படமாட்டீர்கள். ஏனெனில் நீங்கள் பாசாங்கு செய்யவில்லை என்பதயையும் அல்லது அவரைப் பற்றி நல்ல விஷயங்களைச் சொல்வதை அந்த நபர் கேட்க்க வேண்டுமென்ற எண்ணதுடன் நீங்கள் செய்யவில்லை என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அந்த நபர் நீங்கள் அவரைப் பற்றி நல்ல விஷயங்களைச சொல்வதைக் கேட்ட நிலையில், உங்கள் நல்ல பேச்சுக்கள் ஒருவேளை அவரை காயப்படுதியிருக்கலாம் அதனால் நான் உங்களைப் பற்றி நல்ல விஷயங்களை கூறியது ஒரு வேளை உங்கள் மனதை காயப்படுத்திருந்தால் என்னை மன்னித்துவிடுங்கள் என்று நீங்கள் கூற வேண்டும் ஆனால் நீங்கள் புறங்கூறவில்லை என்பதை மிக நன்றாக நீங்கள் அறிவீர்கள். அவர்கள் பற்றி நீங்கள் மிகவும் புகழ்ந்து

பேசும்போது, அவரைப் பற்றி நீங்கள் மிகவும் நன்றாக சொல்கிறீர்கள் என்று எண்ணி அவர் வெட்கப்படலாம்.

இனி மற்றொரு சூல்நிலை உள்ளது ஒருவர் வெளிபடையாக பொய்யை மிக தெளிவாக கூறுகிறார். இது புறங்கூறுதல் அல்ல ஆனால் அதை விட மோசமான ஒன்றாகும். ஹஸ்ரத் அபுகுறைரா (ரலி) அவர்கள் அறிவிப்பு செய்த ஒரு கதீஸில், அதாவது முஸ்லீம் மற்றும் கிதாபுல் பிர்ரில் அத்தகைய ஒரு நிலைமையை குறிப்பிடப்பட்டுள்ளது.

**அண்ணல் நபிகள் நாயகம் ஸல்) அவர்கள் தனது தோழர்களிடம் வினாவினர் “புறம்பேசுதல் என்றால் என்ன என்பது தெரியுமா?” அவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் அது மிக நன்றாக தெரியும் என்று பதிலளித்தனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் “அது உங்கள் சகோதரர் விரும்பாததைப் பற்றி ஏதாவது கூறுவதாகும். அப்போது ஒருவர் கேட்டார். “என் சகோதரனைப் பற்றி நான் சொல்வது உண்மையாக இருந்தால் என்ன செய்வது? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார் “நீங்கள் சொல்வது உண்மையாக இரந்தால் நீங்கள் அவரை பற்றி புறம் பேசுனீர்கள் ஆனால் அது உண்மையல்ல என்றால், நீங்கள் அவரைப் பற்றி அவதூறு செய்துள்ளீர்கள்.”**

ஒருவர் இல்லாத நேரத்தில் நீங்கள் பேசிக் கொண்டிருந்த குறைபாடுகள் அந்த நபரிடம் இருந்தால் அது புறங்கூறுதல் என்று அண்ணல் நபிகள் நாயம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனால் நீங்கள் பேசிக்கொண்டிருந்த அக்குறைபாடுகள் அந்த நபரிடம் இல்லையென்றால், அது ஒரு தவறான குற்றச்சாட்டு மற்றும் அவர் மீது சுமத்திய ஒரு வீண்பழியாகும். அதுகிபாத்தை விட பெரிய பாவமாகிறது. ஒரு நபர் மீது எல்லா வகையான குற்றசாட்டுகளையும் நீங்கள் சுமத்துகின்றீர்கள், ஆனால் எந்த குற்றத்தையும் உங்களால் நிரூபிக்க முடியவில்லை. நான்கு சாட்சிகளை அழைத்து வராமல் அவரை விபச்சாரத்தால் நீங்கள் குற்றம் சாட்டுகிறீர்கள். அவரை அவமானப்படுத்துவதற்காகவே பிறபொய்யான குற்றசாட்டுகளுக்கு அவரை ஆளாக்கின்றீர்கள். இது உண்மையிலேயே ஒரு பெரிய பாவமாகும். இதற்கு திருக்குர்-ஆன் பெரிய தண்டனையை விதித்துள்ளது. ஒரு அப்பாவி நபர் மீது இத்தகைய

பொய்யான குற்றச்சாட்டுகள் கூறப்படும்போது அல்லாஹ்வின் கோபத்திற்கு எந்த விதமான எல்லையும் இருக்காது. எனவே, இந்த இரண்டு நிகழ்சிகளிலும் அதாவது ஒருவரின் குறைபாடுகள் குறித்து நீங்கள் சொல்வது உண்மையானாலும் சரி, இல்லையெனிலும் சரி இதைப் பற்றி உங்களுக்கு பேச சரியான காரணம் எதுவும் இல்லை. நீங்கள் சொல்வது உண்மையென்றால் அது கிபாத்தாகும். அது தவறான குற்றசாட்டு என்றால் அது நீங்கள் அவர் மீது சுமத்திய ஒரு வீண் பழியாகும். ஒருவர் மீது ஒரு பொய்யான குற்றத்தை சாட்டுவது அவரை கொல்வதற்கு சமமாகும். ஆன்மீக உலகில் ஒரு பொய்யான குற்றசாட்டு என்பது தண்டனைக்குரிய குற்றமாகும். இது ஒருவரை கொலை செய்யும் பாவத்தைச் செய்வதற்கு சமம். ஒரு இறந்த உடலின் மாமிசத்தை உண்ணுவதைப் போன்று வெறுக்கதக்க ஒன்று என இதை எண்ண முடியாது. இது அதை விட மோசமானது, மிகவும் அநீதியானது. அல்லாஹ்வின்முன் இதற்கெல்லாம் நீங்கள் கணக்கு கூறவேண்டும்.

எனவே இந்த விஷயம் உண்மையில் மிக விரிவான ஒன்றாகும் ஆனால் இது ஒரு நேரடி அர்த்தத்தையும் கொண்டுள்ளது. ஒரு சமூகத்தின் தார்மீக நிலையின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட இடத்தில் இது மிகவும் முக்கியமானது. இந்த விஷயத்தை நீங்கள் புரிந்துக் கொள்ளவில்லையென்றால், சரியான முறையில் அதை நிறைவேற்றவில்லையென்றால் நீங்கள் பலமுறை இது போன்ற தீமைகளுக்கு ஆளாக நேரிடும், வெறுப்பின் விதைகளை விதைத்ததற்கு நீங்கள் பொறுப்பாவீர்கள் இது நிகழும்பொழுது, பெரிய விளமபர பலகைகளை அமைப்பது முழுமையான பாசாங்குத்தனம் “எல்லோரிடத்திலும் அன்பு எவர் மீதுமில்லை பகைமை” இதை எதற்க காண்பிக்க வேண்டும்? நீங்கள் ஜமாஆத்து மக்களிடையே (வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மக்களிடையே) வெறுப்பின் விதைகளை விதைக்கின்றீர்கள். இந்த வெறுப்பு குடும்பங்களின் இதயங்களில் நுழையசெய்கின்றீர்கள். எல்லா நிலையிலும் இரத்த உறவுகளை பிரிக்கும் விதத்தில் நீங்கள் வெறுப்பை ஜமாஅதது மக்கயிடையே விதைத்து வருகின்றீர்கள். குடும்ப உறவுகளை உடைத்து விடுகின்றீர்கள். இந்த வெறுப்பின் மூலம் அவர்களது சொந்த குடும்பத்தை புறக்கணிக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்துகிறீர்கள். சகோதர சகோதிரிகள் உறவுகளை முறித்து விடுகின்றீர்கள். அவர்களின் தனிப்பட்ட குடும்ப வாழ்கையில் நீங்கள் ஈடுபடுகின்றீர்கள்.

மக்களின் கண்களுக்கு முன் “எல்லோரிடத்திலும் அன்பு எவர் மீதும் இல்லை பகைமை” என்று பெரிய விளம்பரப் பலகைகளை அமைக்கின்றீர்கள், ஆனால் அல்லஹ்வின் பார்வையில், இது வீணானது. உங்களின் செயல்பாடுகள் மூலம் நீங்கள் இறை போதனைகளிலிருந்து விலகிவிட்டீர்கள். இது எவ்வளவு பெரிய பாசாங்குத்தனம்? இன்ஷா அல்லாஹ்! அடுத்த வாரம் இதே விஷயத்தை தொடந்து நான் பேசுகிறேன்

எனவே இது போன்ற நபர்கள் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில் இல்லாமல் இருக்க நமக்கு பிரார்த்தனை செய்வோம். அல்லாஹ் ஒருபோதும் இது போன்ற மக்களை வளப்படுத்தவும் அவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் செய்யமாட்டான், மேலும் அவர்கள் கிப்பத், தஜஸ்ஸுஸ், பொறாமை, பொய் மற்றும் அவதூறுகளிலில் ஈடுபடும் போது அவர்களை ஒருபோதும் அல்லாஹ் விட்டுவைக்க மாட்டான் மாறாக நமக்கு தேவை முத்தகீன்களின் (இறைவனுக்கு பயந்த, நீதியுள்ள, பக்தியுள்ள மக்கள்) ஒரு ஜமாஅத்தாகும் அல்லாஹ்வைப் பற்றி தங்கள் இதயங்களில் பலமான அச்சம் கொணடவர்கள் அடங்கிய ஒரு ஜமாஅத்தையே நாம் விரும்புகிறோம். அல்லாஹ்வின் கோபத்தை நம்மீது ஈர்க்கக்கூடிய இத்தகைய பாவ செயல்களை நாம் ஒருபோதும் செய்யகூடாது.

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமில் இணைந்துள்ள மக்களை அல்லாஹ் தங்கள் சீர்திருத்ததிற்காக கடுமையாக உழைக்க வைப்பான். நாங்கள் எண்ணிக்கையை விரும்பவில்லை (நிறையபோர்கள்). மாறாக நாங்கள் நற்பண்புடைய மக்களையே விரும்புகிறோம். தங்களை சீர்திருத்த விரும்பும் விசுவாசிகள் உண்மையான மற்றும் நல்ல விசுவாசிகள் ஆகியோர்களையே நாங்கள் வரும்புகிறோம் அத்தகைய விசுவாசிகள் உண்மையான முஸ்லீம்களாக மாறுகிறார்கள். சீர்திருத்த முயற்சிகளை மேற்கொள்ளாமல் இதுபோன்ற இறை வெளிப்பாட்டை மட்டும் ஏற்றுக்கொண்டவர்களை அல்லாஹ் வரும்பவில்லை மாறாக அல்லாஹ் விரும்பி தரத்த்தில் உண்மையான மாதிரியாக நீங்கள் மாறவேண்டும். என்பதையே அல்லாஹ் விரும்புகிறான். ஆமீன்! சும்ம ஆமீன் யாரப்பல் ஆலமீன்

**Editing & Publishing are done by *AMIR JAMAAT-UL-SAHIH-AL-ISLAM, TAMIL NADU***
**Ph No: 917502272774**

***Translated by:***
***Naib Amir Azim Ahmad***